# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் வழங்கும் இலக்கியப் பதாகை (பறப்பு-15)

“விதைப்பதெல்லாம் முளைப்பதில்லை, முளைத்தவையே விதைக்கப்படும்” எனும் அறிஞர்களின் கூற்றிற்கு இலக்கணமாகத் திகழும் மதிவாழ் மனிதர்களுள் நாளும் விதைக்கப்படுபவராகத் திகழ்பவர் திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார். அவர் வாழ்வைப் போற்றும் வண்ணம் விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட கலை மற்றும் அறிவியல் புலம், ஆறுபடை வீடு தொழில்நுட்ப வளாகம், தமிழ்த்துறை சார்பில் மே -26ஆம் தேதி இலக்கியப் பதாகை பறப்பு-15 நிகழ்வு நடந்தேறியது.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

நிகழ்விற்கு கலை மற்றும் அறிவியல் புலத்தின் இயக்குநர் முனைவர் இரா.ஷண்முகவள்ளி அவர்கள் தலைமை வகித்து அவர் பேசுகையில் மாணவர்கள் எக்காரணம் கொண்டும் உங்களுடைய மன தைரியத்தை இழந்து விடக்கூடாது. மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மன தைரியமே உங்களுக்கு மருந்தாக அமையும் என்றார். மாணவர்கள் சுகாதாரத்துடனும், பாதுகாப்புடனும் உங்களை நீங்கள் காத்துக்கொள்ள முன்வர வேண்டும் என உரையாற்றினார்.

‘மருத்தென வேண்டாவாம் யாக்கைக்கு’ எனும் வள்ளுவரின் வார்த்தை பொய்த்துப் போன தற்காலத்தே அவற்றிலிருந்து மக்கள் தங்களை காத்து வாழ **‘தீநுண்மி (கொரோனா) விழிப்புணர்வு சிந்தனைக்களம்’** எனும் தலைப்பில் உயிர்காக்கும் மனித நோக்கோடு, அறச்செயலாக நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலை மற்றும் அறிவியல் புலத்தின் பேராசிரிய பெருமக்களான **முனைவர் ஜெயபிரகாஷ்** (வேதியியல் துறை), **திருமதி பத்மராகம்** (ஆங்கிலத்துறை), **முனைவர் கிருஷ்ணமூர்த்தி** (வணிகவியல் துறை) ஆகியோர் பங்கேற்று தீநுண்மி (கொரோனா) நோயிலிருந்து நம்மை நாம் எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி படக்காட்சிகளின் மூலமாக விளக்கத்துடன் உரை வழங்கினார்கள். இவ் உரையின் வழியாக மாணவர்களும், பேராசிரியர்களும் பெரும் பயனையடைந்தனர்.

தீநுண்மி (கொரோனா) பற்றிய விழிப்புணர்வின் அவசியத்தையும், நாம் எவ்வாறு அதனை கண்டு அஞ்சாமல்,எவ்வாறு பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்பதனை எடுத்துரைத்தும், போராசிரிய பெருமக்களை மாணவர்களுக்கு முறையாக அறிமுகம் செய்து வைத்தார் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள்.

வரவேற்புரையை திரு அ.முத்துக்குமார் அவர்களும், விழா – தொகுத்து வழங்குதலை முனைவர் ந.சுரேஷ் அவர்களும், நன்றியுரையை திரு.சு.பழனியப்பா அவர்களும் வழங்கி சிறப்பித்தனர். தமிழ்த்துறை சார்பில் நடைபெற்ற இணைவழி நிகழ்வில் மாணவ மாணவிகள், அனைத்து துறை சார்ந்த பேராசிரியர்கள், மற்றும் தமிழ் ஆர்வலர்கள் நல் ஆதரவுடன் இனிதே நடைபெற்றது.

SAS
SCHOOL OF ARTS AND SCIENCE
ISO 21001:2018 CERTIFIED

VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
DEEMED TO BE UNIVERSITY
(Declared Under Section 3 of the UGC Act, 1956)







